251

422

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பிரமோத்தர காண்டத்தில்

சத்தியாதனன் சரித்திரமென்னும்,

அஞ்சுமதி கலியாண

நாடகம்.

தென்னாற்காடு ஜில்லா

கூடலூர்தாலுக்கா வண்டிப்பாளயம்

சின்னைய ஆழ்வார் மாணாக்கனாக

ஷை குமாரனாகவும் விளங்கிவரும் உபாத்தியார்

S. அருணாஜல ஆழ்வார் இயற்றியதை,

ம-ள-ள-ஸ்ரீ, கூடலூர்

வீரப்படை யாச்சியாரிடம்,

காலஞ்சென்ற

கூனை-முனுசாமி முதலியார் பாரியாள்

அம்மணி அம்மாள்,

சகல சுதந்தரமும் பெற்றுக்கொண்டு

சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

1927. [அணா 6

OFFICE OF THE REGISTRAR OF ... 14 APR 1928 MADRAS

ACL-TMAL 00370

O-,892MAAI,A N27 85493

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பிரமோத்தர காண்டத்தில்

சத்தியாதனன் சரித்திரமென்னும்,

OFFICE OF THE REGISTRAR ... MADRAS

அஞ்சுமதி கலியாண

நாடகம்.

தென்னாற்காடு ஜில்லா

கூடலூர்தாலூக்கா வண்டிப்பாளயம்.

சின்னைய ஆழ்வார் மாணாக்கனாகவும்

ஷை குமாரனாகவும் விளங்கிவரும் உபாத்தியாயர்

S. அருணாஜல ஆழ்வார் இயற்றியதை,

ம-ா-ா-ஸ்ரீ, கூடலூர்

வீரப்படையாச்சியாரிடம்,

காலஞ்சென்ற

சூளை-முனுசாமி முதலியார் பாரியாள்

அம்மணி அம்மாள்,

சகல சுதந்தரமும் பெற்றுக்கொண்டு

சென்னை.

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்ஸில்

பதிப்பித்தது.

ரிஜிஸ்டர்ட் காபி ரைட்.

இதன் விலை 1927. அணா 6.

85493

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் மற்றயாவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

ம-ா-ா-ஸ்ரீ; தென்னார்க்காடு ஜில்லா, கூடலூர் தாலூக்கா வண்டிப்பாளையம் சின்னைய ஆழ்வார் மாணாக்கனாகவும் ஷை யார் குமாரனாகவும் விளங்கிவரும் உபாத்தியாயர் S. அருணாஜல ஆழ்வார் சத்தியாதனன் சரித்திரமென்னும் அஞ்சுமதிகலியாண நாடகத்தை இயற்றியதை, கூடலூர் - வீரப்படையாச்சியாரிடம் சென்னை-சூளை-சாமிபிள்ளை தெருவு, 54-நெம்பர் வீட்டில் புத்தக வியாபாரம், காலஞ்சென்ற சூளை-முனுசாமிமுதலியார் பாரியாள் அம்மணியம்மாள் சகல சுதந்தரத்தையும் பெற்றுக்கொண்டு என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தி யிருப்பதால், ஷை நாடகத்தை யாதாமொருவர் அச்சிடுவரேல் 1925ஷு த்து25-வது ஆக்டு 20-வது பிரிவு 6-வது உட்பிரிவின் விதிப்படி யான்கோறும் நஷ்டத்திற்கும், பினல்கோர்ட்டு செக்ஷன் படிக்கும், வுத்திரவாதிகளாக வேண்டுமென்பதை கவனிக்கக் கோறுகிறேன்.

இப்படிக்கு,

சூளை-அம்மணியம்மாள்.

OFFICE ... MADRAS
1 APR 1928

உ

கணபதி துணை.

பிரமோத்ர காண்டத்தில்

சத்தியாதனன் சரித்திரமென்னும்,

அஞ்சுமதி கலியாண நாடகம்.

சத்தியாதன மகாராஜன் வருகிற கவி.

முடிகளும்பளபளென்ன மோகனமாலையாட
துடிபெரும்அமைச்சர்சூழ தொல்லுலகோர்கொண்டாட
சடுதியில்சரசமாதர் சாமரையிருபால்வீச
படிபுகழ்சத்தியாதனன்தான் பண்புடன்கொலுவதானார்.

தரு.

வந்தேன்சத்தியாதனமகாராசன்—கொலுவைநாடி.
வாறான்சத்தியாதனமகாராசன்
வந்தேன்சத்தியாதனராசன் இந்திராதியோர்புகழ
சந்தோஷமாய்சபையில் விந்தையதாகவே சுரு
சற்குணம்பொருந்திய விற்பனமன்னனும்
கற்புள்ளமங்கையர் நற்படிசூழ்ந்திட வந்

பரமசிவன்பதத்தைகோரி—அனுதினமும்
பண்பாய்மனமதுதான்தேரி

சரசமாதவர்கள் சங்கீதங்கள்பாடிட
வரிசையுடனுலாத்தி வகையாகயேந்திவர சுரு

வஸ்துவைவநானும்யென் புத்தியில்மறவேன்
நித்தியம்அரமது பத்தியாய்கொடுப்பேன் வங்

இரத்தினமகுடமதுமின்ன—தங்கமிழைத்த
நாகரீகபுஜங்கள்துன்ன

இத்திசையோர்களும் நத்தியடிபணிய
சற்றுமஞ்சாதவீரன் வெற்றிக்கொடியுடனே சுரு

சல்லரிதாளங்கள் மேளங்கள்முழங்கிட
மல்லரிவீணைகள் பம்பையதிர்ந்திட வங்

மாதர்நடனமதுஆட—வகைவகையாய்
மங்கையர்கவரியதுபோட

காதலாய்மன்னவர்கள் கண்டடிபணியவே
நீதிநெறியுள்ளமன்னன் வேதியர்கள்சூழ்ந்திடவே சுரு

நித்தியானந்தனை வைத்துமேமனதினில்
யித்தலம்தன்னையே சித்தமாயாண்டிடும் வங்

கடவுள் வணக்கம் கவி.

தற்பருபரனேயுந்தன் தாளிணைகமலந்தன்னை
அற்புதமலர்கள்கொண்டு அடியேனும்பூசைசெய்து
நற்படிவலமாய்வந்து நயம்பெறகறங்குவித்து
சொற்படிகாத்துநீயும் சுகமது அளிப்பாய்போற்றி.

வசனம்.

அறகரு மகாதேவா காளகண்ட திருநேத்திரு உமது பொர் பாதவிந்த கமலங்களில் அற்புதமாகிய புஷ்பங்களால் அர்ச்சனை செய்து வலமிடமாகவந்து சாஷ்டாங்க நமஸ்காரம் புரிந்தேன்என்னையும் என்தேசத்தையும் அதிலுண்டாகிய குடி படைகளையும் காத்து ரக்ஷிக்கவேண்டுமையா கர்த்தனே.

சத்தியாதனன் பூசை தரு காவடிச் சிந்து.

சாம்பசிவசங்கரனே வாரும்—எனக்கு
சம்பிரமமாய்யிங்கிருந்து காரும் சுரு

சத்துசித்தானந்தகுண வஸ்துவேயெந்தனை
வந்துகாரும் கடைக்கண் பாரும்

பார்வதியைப்பாகங்கொண்டமெய்யா—உன்னை
பண்புடன்தொழுதிட்டேன் ஐயா சுரு

பக்ஷமுடன் றக்ஷியென்று யிக்ஷணமே
யான்தொழுதேன்நீயே வருவாயே

விடையேருமெங்கள்குருநாதா—யிப்போ
வேண்டினேனுன்மனமிறங்காதா சுரு

வில்வங்கொண்டுன்பதத்தை நல்லமனதுடன்
தொழுதேற்றி நானும் போற்றி

நந்தனுர்க்குமுத்தியளித்தோனே—இந்த
நானிலத்திலுன்னைத்தொழுதேனே சுரு

நஞ்சையுண்டகண்டத்தோனே வஞ்சனைகள்
செய்யவேண்டாமையா மலர்க்கையா

சத்தியாதனன் சொல் கவி.

சிவபூசைமுடித்துக்கொண்டோம் சீருடன்மனைக்குமேகி
அவலமதில்லாமல்தான் அருசுவையன்னமுண்டு
தவருமலறசுசெய்யும் சதிர்பெரும்கொலுக்கூடத்தில்
நவறசம்பொருந்துமாபோல் நாமுமே அரசுசெய்வோம்.

வசனம்.

கேளுமப்பா நான்சாக்ஷாத் எம்பெருமானுகிய பரமசிவத்தை பூசித்துவிட்டேன் அரண்மனைசென்று அருசுவையோடுங் கூடிய பதார்த்தங்களோடு அன்னபனுதிகளும் பொசித்து விட்டோம் சந்தோஷமாக கொலுக்கூடம்சென்று அரசாக்ஷி புரியவேண்டியது சந்தோஷமாய் வாருங்கள் போகலாம் மந்திரிமாரே.

சத்தியாதனன் சொல் கவி.

சீருள்ளமந்திரிமாரே சிறப்புடன்சொல்வேனென்று
தேரியேயெனக்குரைப்பீர் தேவாலயங்கள்தோரும்
ஆருகாலங்கள்பூசை அன்புடன்நடக்குதாசொல்
சாரியாய்நான்குவர்ண ஜாதியார்சுபேக்ஷந்தானே.

வசனம்.

கேளும்மந்திரி நமது பட்டணமாகிய விதர்ப்பதேசத்தில் சிவாலயம் பிரமாலயம் விஷ்ணுவாலயம் இம்மூன்று ஆலயங்களில்

ஆருகாலபூசையும் தேர்திருவிழா முதலானதும் குறைவில்லாமல் நடக்கின்றதா நமது பட்டணத்திலுண்டான பிறம க்ஷத்திரிய வைசிய சூஸ்திரர் என்று சொல்லபட்ட நான்கு வற்ணாச்சிரமங்களும் திங்கள் மும்மாரியும் பொழிந்து நமது பட்டணம் க்ஷேமமாக யிருக்கின்றதா தெரிவிப்பீர்.

மந்திரி வசனம்.

அப்படியே க்ஷேமம்பொருந்தி யிருக்கின்றது அரசே.

பொது வசனம்.

சாலுவதேசாதிபதியாகிய துன்மருஷண மகாருசன் மந்திரி பிரதானிகள் புடைசூழ கொலுவாக வருவது.

துன்மருஷன் கவி.

முடிகளும்பளபளென்ன மோகனமாலையாட
இடிகள்போல்ஆக்கறித்து யிருவிழிபொறிபறக்க
கடுகியமுறசுபேரி காளசின்னமுழங்க
துடிபெருங்கொலுவைநாடி துன்மருஷன்வருகின்றானே.

துன்மருஷன் தரு.

வீரர்க்குவீறனை வீறன் துன்மருஷ்னன்
வேந்தன்கொலுவதாகினேன் நவமணிமுடிமின்ன
பாருங்கிடுகிடுடென்ன படைமன்னர்நெருங்கிட சரு
பத்தியதாகவே வெள்ளிபுரிந்திட
சித்தத்தில்நினைந்துமே சிறப்புடன்வந்தனன் வீரர்

சோதிரத்தினகுண்டலம் காதில்தகதகென்ன
வாதுசெய்யவேஎண்ணிவந்தேன் கொலுவைநாடி சுரு

வஞ்சகம்கொண்டுமே சஞ்சலமில்லாமலே
நெஞ்சைதுணித்திட நெறியுடன்வந்தனன் வீரர்

சித்திரகவரிமாதர் பத்தியாய்யிருபால்வீச
மெத்தசந்தோஷமாக சித்தங்களித்துபேச சுரு

செந்திருகடாக்ஷமும் பந்தமதாகவே
சந்ததம்கொண்டுமே சிந்தைமகிழ்ந்துமே வீரர்

விகற்பதேசத்தையாளும் வீறன்சித்தியாதனன்மேல்
வெல்லமனதிலெண்ணி வல்லவீறங்கூறிய சுரு

விகற்பனைநெருங்கிய பற்பலற்சூழவே
தற்பறன்தன்னையே சதிருடன்தியானித்து வீரர்

துன்மருஷன் கவி.

சேனைகாவலரேகேளும் திறமுடன்நாமும்மிப்போ
தோணவேவிகர்ப்பதேசம் சொகுசுடன்யேகியங்கே
வீணனுயிருக்குமந்த வீறன்சத்தியாதனனை
பாணத்தால்கண்டித்துமே பண்புடன்வருகலாமே.

துன்மருஷன் வசனம்.

வாருங்கள் சேனை காவலர்களே நாம்விகற்பதேசத்துக்கு அதிபதியாகிய சத்தியாதன மகாராசனை கொன்றுவிட்டு அவன் நாடாகிய விகர்ப்ப தேசத்தை கைபற்றவேண்டும் ஆகையால் நால்வகைசேனைகளை கூட்டிக்கொண்டு சண்டைக்கு புறப்படுங்கள் காவலர்களே.

துன்மருஷன் தரு.

சண்டைக்குநடப்போம்வாருங்கள் அதிவீரரணமுகசூரரேதீரரே
சண்டைக்குநடப்போம்வாருங்கள்
சண்டைக்குபடையைகூட்டி சல்லாரிபேரிகைமீட்டி சுரு

சாரிபுறவிகளும் வீரரும்நெருங்கிட
தேருடன்கரிபறி மீறியிருந்திட சண்

வில்வாள்கறத்திலெடுத்தேன்வந்திடும் அவனுடல்சிந்துசிந்தாகவே
மல்லுசெய்தவனை மடிப்பேன்
சல்லை சண்களைப்போல் தாக்கியபரணத்தால் சுரு

சக்கைசக்கையாய் மக்கிடவதைத்துவே
உக்கிறமாகவே ஓடியேவந்தனன்

எந்தன்சமுகத்தைபாருங்கள் வீரரேறணமுகசூரரேதீரரே
எந்தன்சமுகத்தை பாருங்கள்
எந்தன்சமர்த்தினுல் எதிர்த்தவனைக்கொன்று சுரு

இப்போதேவருகிறேன் தப்பிதமில்லாமல்
ஒப்புடன்நீங்களும் நற்படிவாருங்கள் சண்

பொது வசனம்.

இவ்விதமாகசாலுவதேசத்தை யாளப்பட்டதுன்மருஷன்மகாருசன் விதற்பதேசத்துக்கு படைகூட்டிவந்து முற்றுகைபோட்டு றணபேரியறைய அந்த சத்தத்தைக்கேட்டு சத்தியாதன ருசன் ஏதென்று சொல்லுகிற விதங்காண்க.

சத்தியாதனன் சொல் கவி.

ஆரடாகாவல்காரா அடைவுடன்பேரிசத்தம்
பாரடாநமதுமீதில் படையெடுத்தவனைகொன்று
தேரடாயெமலோகத்தில் சேர்க்கவேதடையுமில்லை
நீரடாசெய்வேனிப்போ நிமிஷத்தில்வருகுவீரே.

வசனம்.

கேளுங்கள் சேனைகாவலரே நமதுமீதில் யாரோ ஒரு அரசன் படையெடுத்துவந்து றணபேரிகை யறைந்தசத்தம் என்காதில் கேட்டதுநாம் சும்மாயிருக்கக்கூடாது நமது படைகளைக் கூட்டி கொண்டு யுத்தம்செய்து அவனை மடிக்கவேண்டியது சீக்கிரம் நமது நால்வகை சேனைகளைக் கூட்டுங்கள் சேனை காவலரே.

சத்தியாதனன் சொல் கவி.

வலிசண்டைக்குவந்த மன்னனேசொல்லக்கேளாய்
நலியமேயுன்னைக்கொன்று எமலோகமனுப்பிவைப்பேன்
சலிதியாய்ஓடிப்போனுல் தப்பித்துகொள்வாய்நீயும்
பலிதறவந்தேனிப்போ பாரடாயென்சமர்த்தை

சத்தியாதனன் சொல் தரு.

சாலுவதேசத்தைசதிருடனுண்டிடும் ருசனே
சடுதியிலென்னியிடம்சமருக்குவந்தாயோ ருசனே சுரு

சண்டாளாவுன்னையிரு துண்டாய்செய்குவேனிதோ
மீண்டாயுயிர்தப்பி கொண்டாலிது தருணம்
மீட்டிடுவேன்கணை பூட்டிடுவேனிதோ
ஓட்டிடுவேனுன்னை வாட்டுறேன்பாரிதோ சாலு

தன்மருஷன் சொல் தரு.

இப்படிசொல்லவுமென்மனதில்கோபங் கொண்டேனே
இனியுன்னைவிடுவேனேயிருதுண்டம்செய்யாமல் மிண்டேனே

சுரு எப்படியுந்தனையிப்போ வெட்டியெரிந்திடவும்
அட்டியுண்டோயினிமேல் மட்டிபயலேவுன்னை
ஆட்டிவிட்டேன்சரம் பூட்டிவிட்டேன்ருசம்
ஓட்டிவிட்டேன்தணல் மூட்டுவேன்பாரிதோ இப்

சத்தியாதனன் சொல் தரு.

என்னடாநீயுமேயென்னுடன்சமாசெய்ய எண்ணினாய்
ஏகமாகவேபாணப்பிரயோகமும் பண்ணினாய் சுரு

எத்தாய்வில்லைவளைத்தேன் செத்தாயிப்பவேநீயும்
ஒத்தாசையில்லாமலே பித்தாமடிந்திடுவாய்

எரிவந்தாய்மனந் தேரிவந்தாயென்மேல்
மீறிவந்தாயுன்னைக் கூறிடுவேனிதோ

துருமருஷன் சொல் தரு.

கற்றகல்வியைகாட்டவந்தாயடா மிண்டனே
காதலாயுன்மீதில்தீதுடன்கோபமுங் கொண்டேனே சுரு

காட்டிருசத்துடனே தீட்டிதனுவில்பாணம்
பூட்டிவுயிரைக்கொல்ல மாட்டிவிட்டேன்பாராய்
புல்லாயெந்தனிடத்தில் செல்லாதுனதுவீறம்
வல்லாண்மைபேசவேண்டாம்எல்லாம்தெறியும்போடா கற்

சத்தியாதனன் சொல் கவி.

இப்படிகூறவந்த யியல்பில்லாமூடாவுன்னை
தப்பிதமில்லாதெந்தன் தனுவதில்பாணம்பூட்டி
நற்படிபிராணன்தன்னை நமலோகமனுப்பிவைப்பேன்
செப்பினேன்தடையுமில்லை சீக்கிரம்ஓடிப்போடா.

சத்தியாதனன் வசனம்.

அடாவாடா வலியசண்டைக்குவந்த மூடப்பயலே என்கையால் பாணபிரயோகம்செய்து இப்பவே உன் உயிரை எமலோகம் சேர்க்குறேன் பாரடா மூடப்பயலே.

துன்மருஷன் சொல் கவி.

இந்தமோர் நிமிஷம்தன்னில்
எமகிரி சேர்ப்பேன்வுன்னை
சந்தேக மில்லையிப்போ
க்ஷணத்தினில் பாணம்பூட்டி
விந்தையாய் விடுத்தேன்பாராய்
விரைவாக தடுக்கமாட்டாய்
பந்தமாய் வார்த்தைதன்னை
பனுக்காதே மூடாபோடா.

துன்மருஷன் வசனம்.

அடாவாடா சத்தியாதனனே உன்னை எமகிரிக்கி சேர்க்கும் படியாகதீரம் எனக்குண்டுடீ அதிகமாக பேசவேண்டாம் எதிர்த்து வாடா மூடனே.

சத்தியாதனன் சொல் தரு.

சிலைகரம்கொண்டேன்	உன்வுயிரை
சிதைக்கவே	விண்டேன்
நலமாகவேயிப்போ	நமலோகமனுப்புவேன்
பலமானவனென்று	பதைக்காதேகுதிக்காதே

துன்மருஷன் சொல் தரு.

தனுவதையெடுத்தேன்	பாணம்பூட்டி
சதிருக	தொடுத்தேன்
கனமானயென்னிட	கணையைதடுத்திட
அனுச்சாரமேஉன்னால்	ஆகாதுஓடிப்போடா

சத்தியாதனன் சொல் தரு.

ஓடிப்போவென்று	என்முன்னேவந்து
நாடினாய்	இன்று
தேடியென்னிடம்	திறமாய்மல்லுக்குவந்தாய்
கூடியபடையுடன்	கூசாமல்லோடிப்போடா

துன்மருஷன் சொல் தரு.

போகவாவந்தேன் என்கையில்நீ சாகவேவந்தாய்
நோகவேவுந்தன்மேல் நொடிக்குள்பாணமேவி
பாகமாகவேநான் பதைக்கவதைத்தேன்பார் போ

வசனம்.

இவ்விதமாக சாலுவதேசத்துக்கு அதிபதியாகிய துன்மருஷன் சத்தியாதனன்மேல் பாணங்களைவிட்டு கொன்றுவிட்டு விதர்ப்பதேசத்தை கைப்பற்றிகொள்ள இதுகளை சத்தியாதனன் தேவி சதியென்பவளுக்கு தெரிவிக்க பத்துமாதம் கெற்பவத்தோடு வருகிறவிதம் காண்க.

சதி வருகிற கவி.

பைங்கொடியானமாது பறிவுடன்பணிகள்பூண்டு
இங்கி தசரிகைசேலை இடையினில் பளபளென்ன
தங்கியமுத்துகுச்சி சடையில்லைசிறசில்வைத்து
மங்களமாகவேதான் மாதெனுசதிவந்தாளே.

சதி சொல் தரு.

அன்னநடைநடந்து மின்னலிடைதுவண்டு
அதிரூபசதியும்வந்தாள் கெற்பணியாகஅதிரூபசதியும்வந்தாள்
கன்னல்மதனசதிபோல் காலின்தண்டைகள்கொஞ்ச
வர்னமயிலைபொத்த வஞ்சியதிவோயிலாய் சுரு
வாசனைபொருந்திய மாசில்லாமல்தனை
பாசமதாகவே நேசமாய்சூடியே அன்
தண்டைவெண்டையம்காலில் மண்டிக்கலகலென்ன
பெண்டிசையோர்களும் கண்டதிசயித்திட சுரு

இத்தகைமாதுமே பத்தியாய்சபைதனில்
சுத்திலும்மாதர்கள் வெற்றியாய்சூழ்ந்திட அன்

முத்துச்சுட்டிகள்மின்ன ரத்தினப்பணிகள்துன்ன
முல்லையரும்புபோல பல்லொளிதுலங்கிட சுரு

மூதறிவாகிய நாதனிறந்தசேதி
தாதிகள்கூறவே காதலாயோடியே

பாலொத்தமொழியினாள் சேலொத்தவிழியினாள்
நாளொத்துப்போனதினால் நாயகனிறந்தசேதி சுரு

நானும்மறிந்திட கானகந்தனில்சென்று
சேனைநடந்திருக்கும் சேதிதனையறிய அன்

தோழி சொல் வசனம்.

கேளுமம்மா உமது கணவனை வேற்றரசன் படையெடுத்து வந்து சண்டைசெய்துக்கொண்டே கானகத்தில் கொண்டுபோய் உமது கணவனை மடித்துவிட்டார்களம்மா தாயே.

சதிபுலம்பல் ஜம்பை.

என்னசெய்வேன்யேதுசெய்வேன் என்கணவன்மாண்டவிடம்
எங்கேகண்டுபோவேனையோ யீசாகையிலாசவாசா
துஷ்டர்கள்என்கணவன்தன்னை துரிதமுடன்கொன்றுவிட்டார்
இஷ்டமுள்ளயிவ்வனத்தில் யெங்கேகண்டுதேடுவேனுன்
திருவிளமேயென்னசெய்வேன் தீவினைக்காளாகினேனே
வரும்விதியைதான்தடுக்க வையகத்திலொருவருண்டோ
மையிழந்தேன்பொட்டிழந்தேன் மஞ்சளதுநானிழந்தேன்
கைவளையில்தானிழந்தேன் காதலுள்ளபூவிழந்தேன்
உலகமதில்பெண்களைப்போல் நானுமேபிறக்கலியோ
உத்தமனைப்பரிகொடுத்து யித்திசையில்வாழலாமோ
மக்கிலியம்நானிழந்து இந்தமண்மேலிருக்கலாமோ
நாயகனைநானிழந்து நாட்டினிலிருக்கலாமோ
பத்தாவைதானிழந்து பார்தனிலிருக்கலாமோ
ஐயோகெர்ப்பவாதையது அடிவயற்றைநோகுதையோ
அரசனில்லாப்பாவியாகி அலையவிதிவசமோ
கானகத்தில்நானலைந்து கணவன்தன்னைகாணமலே
கனத்ததுயர்கொண்டயானும் கதரியழக்காரணமோ

சதி கொச்சகம்.

என்னுடையகணவனைநான் இன்பமுடன்கானகத்தில்
வன்மையுள்ளயிரவுதனில் மங்கையுநான்தேடிவற
பெண்மயிலாலென்வயிற்றில் பிண்டமத்நோக்குதம்மா
தன்மையுள்ளமனமதுதான் சஞ்சலங்களாகுதடி.

சதி புலம்பல் தரு.

சிவனேநான்யென்னசெய்குவேன் இந்த
ஜெகந்தனிலுன்பதத்தை மகிழ்ந்துநமஸ்கரித்தேன்
பவந்தனைபோக்கியே பாதுகாக்கவொண்ணுதா சுரு

பத்தியுடனேயெந்தன் சித்தத்திலுன்பதம்
நத்திப்பணிந்தேனையா சற்றேகிருபைதாரும் சிவ

கணவனிறந்தயிடத்தை நான்
கவனமாய்தேடியே விசனமாய்வருகையில்
வனந்தனில்தேடியே வந்தேன்நகரைவிட்டு சுரு

வருத்துதேகெற்பவாதை பொருக்கமுடியலியே
நருக்கிதுவைத்ததுபோ லிருக்கிமுருக்குதையோ கண

தனியாயழுதுவந்தேனே நான்
சஞ்சலங்கொண்டுமே மிஞ்சியேகானகம் தனி
கனிவாய்மொழியுடைய கணவனிறந்தயிடம் சுரு

காதலாயெனக்குமே ஓதுவாருமில்லையே
நாதனைக்காணுமல் வாதைகளாகுதே தனி

பொது வசனம்.

இவ்விதமாக சதியானவள் தன்கணவன் யிறந்த யிடம் தேடியே கானத்தில் தனியாய் நடந்து செல்லும்போது சதிக்கு பத்து மாதம் கெற்பமானபடியால் கெற்பவேதனைப்படுகிறவிதம் எப்படியென்றால்.

சதி சீச பத்தியம்.

கணவனும்யிறந்திட்ட கானகம்தேடியே
கன்னியாள்தனிமையாய் வருகும்போது
குணமாய்வயிற்றினில் இருந்திடும்பிண்டமது
குறித்திடும்பிறசவ மாகுதிப்போ
மணமாதர்கள் யென் அருகில்லை

மதிமயக்க மாகுதிப்போ
இனமதுபிரிந்திடும் மான்போல்தாக்கவே
என்னைவிட்டுஎன்கணவன் இறந்தகாலம்
இப்படிநடக்கவும் யீசன்செயலோ
மையடிமாதர்கள் அருகிலில்லை
விற்படிமன்னனும் மிறந்துபோக
செப்பியபாலகன் பிறந்தானையோ.

சதி சொல் தரு.

தறணியிற்பிள்ளைபிறந்து	தகப்பனைகொன்றுயடா
சீலாயெந்தன்	பாலா
சாமியருளால்நீயும்	பூமியில்கொன்றுயடா
சீலாயெந்தன்	பாலா
வையகத்தில்நீபிறந்தால்	செய்வினையனேகமுண்டு
சீலாயெந்தன்	பாலா
பையவேகானகத்தில்	கையுமராத்திரிவேளையில்
சீலாயெந்தன்	பாலா
ஒருதுணையில்லாமல்	ஒண்டியாய்வந்தயிடத்தில்
சீலாயெந்தன்	பாலா
அருமையாய்நீபிறக்க	ஆற்றொணுதுயறமானேன்
பாலாயெந்தன்	சீலா
தகப்பனில்லாபிள்ளையென்று	தாறணியிர்சொல்லுவார்
பாலாயெந்தன்	சீலா
மருத்துவமாவுன்தலையில்	மறையவனெழுதினுனே
பாலாயெந்தன்	சீலா
உந்தனையீன்றதினல்	உதிறகவுல்தாங்கவில்லை
பாலாயெந்தன்	சீலா
சந்தமும்திரேகத்தை	சதிருடன்சுத்திசெய்து
பாலாயெந்தன்	சீலா
தாகவிடாய்தான்தவிர்த்து	சதிருடன்நாடுசேர்வோம்
பாலாயெந்தன்	சீலா
பாகமாகநீரோடைக்கு	பண்புடன்நாமும்சேர்வோம்
பாலாயெந்தன்	சீலா

பொது கவி.

இப்படிபிரலாபித்து யேகியேநீரோடைக்கு
கொப்பனகறையோரத்தில் குழந்தையைவளர்த்திவிட்டு

மய்பிடி கண்ணுளான மங்கையும்ஜலத்திலிறங்கி
கைப்பிடிசதியாள்தன்னை கருவுமிழிங்கின்றனவே.

பொது வசனம்.

இந்த விதமாக காட்டிவிறந்த நாயகனை இரவில் தேடிசெல்ல வயிற்றிலிருந்தபிண்டம் பிறவசமாக ஆண்குழந்தையாகயிருக்க புருஷனிரந்துபோன விசனம் ஒருவாருநீங்கி உதிரத்தை சுத்தி செய்யவும் தாகபானம் செய்யவும் நீரோடைக்குவந்து கரைமேல் குழந்தையை கிடத்திவிட்டு நீரோடையிலிறங்க அதிலிருக்கப்பட்ட முதலை சதியை விழுங்கிவிட்டு குழந்தை தனியாயிருக்க ஏகசக்கிர புரியிலிருந்து உமையென்னும் பிருமணமாது ஸ்னானம்செய்ய நீரோடைக்கு வருவது.

உமை சொல் கவி.

நதிதனில்ஸ்நானஞ்செய்ய நங்கையும்பயணமாகி
மதியுடன்நடைநடந்து மகவையும்யிடுப்பில்வைத்து
சதிருடன்னுடைபூண்டு சஞ்சலங்கொண்டுமாது
கதிபெருமுமையாள்மாது கடுகியேவருகின்ருளே.

உமை சொல் தரு.

வந்தாள்வுமையவளென்னும் பிராமணமாது
ஸ்நானங்கள் செய்ய
வாருள்வுமையவளென்னும் பிராமணமாது
வந்தாளதியொயிலாய் சந்தோஷமாய்நடந்து
மைந்தனை தூக்கியே விந்தையதாகவே வந்

நீரோடைதனக்குமே நேர்மையுடன்வந்திட
பாரோறதிசயிக்க பக்ஷமாய்நடந்துவோடி வந்

பாலசுப்பிரமன்னியர்போல் பாலகனிருக்கக்கண்டு
வாளவயதுள்ளமாது மனதுவேருகியே வந்

இந்தக்குழந்தைதன்னை யீன்றவளெங்கேபோனுள்
நிந்தையாயிருக்குதென்று நீதியாகவேவந்தாள் வந்

உமை சொல் கவி.

இப்பாலன்தன்னையிங்கே யின்பமாய்கிடத்திவிட்டு
செப்பென்னதாயாரெங்கே போனுளோதெரியவில்லை
செப்பிடுங்கைலைவாசா சிவசிவாயென்னசெய்வேன்
கப்பிதமில்லாஇந்த சங்கதிதெரிகிலேனே.

வசனம்.

ஜெகதீசா நான் நீரோடைக்கு ஸ்நானஞ்செய்யவந்து இந்த நீரோடைகரைமேல் பாலசுப்பிரமணியக் கடவுள்போல் ரூபலா வண்யம் பொருந்தி யிருக்கப்பட்ட குழந்தைக்கு தொப்புள் கொடியும் காயவில்லை உதிரமும் காயவில்லை இப்போதுதான் பிறந்த சிசு போல காண்கிறது இதன் தாயாரெங்கேபோனாள் தெரியவில்லையே கர்த்தனே.

உமை சொல் தரு.

மலடிவயிற்று-என்றவர்ன மெட்டு.

அரகரசிவசிவமகாதேவாயிந்த அதிசயந்தனை
எங்குங்கண்டதில்லை திறமுடன்பாலனை
யீன்றவளெங்குதான் சென்றாளோ

பாதகியென்கண்ணில் பார்த்திடவும்-இந்த
பார்தனிலுள்ளவர் ஏர்த்திடவும்
தோதகமாகியே என்னிடநெஞ்சக-மதுவாடி

மனமதுவாடுதேஎந்தனுக்கு இப்போ
மதியதுதயங்குதே யென்னசெய்வேன்
தனயன்வறலாருதெரிவிக்க யாரையுங்காண்கிலேனே

பொது வசனம்

இவ்விதமாக உமை என்னும் பிராமணமாது குழந்தையைப் பார்த்து பிறலாபித்துக்கொண் டிருக்கும்போது அந்த வனத்திலிருக்கும் கற்கரிஷி மகாமுனிவர் சபைநாடி வருகிறவிதம் காண்க.

கற்கரிஷி சொல் கவி.

இந்தவிதம்வுமையவள்தான் விசனமாக
இருக்குமந்தவேளைதனில் சபையைநாடி
பந்தமுடன்சடைமுடியும் மிலங்குதோன்ற
பரிவானகரமதிலே தண்டுமேந்தி
விந்தைபெறபாதகுறடு அசைந்துதோன்ற
வேகமதாய்நடைநடந்து சபைமுன்பாக
சந்தோஷம்பெருகி வாலாருசொல்ல
சதிருனகற்கரிஷி தோன்றினாரே.

கற்கரிஷி வருகிற சொல் தரு.

கற்கரிஷியுமிதோ வந்தார்-நல்ல
கையினில்தெண்டுடன் மெய்யில்பஞ்சாக்ஷரம்
[illegible]வர்க்கு அருள்மிகதந்தார்

முடுகு.

மறைபதுவுணர்ந்திடும் மாமுனியோருக்குநாதன்
இவ்வனத்தில்
மாதவம்செய்திடும் மானிதியாகியவேதன்
உமையாளுக்கு
தரையினில்சந்தோஷ வார்த்தைபுகன்றிடும்நீதன்
தாமதமின்றி
சல்தியாய்காட்டினில் தவமதுசெய்திடும்-பாதன்
சந்தோஷமாக சஞ்சலமில்லாமல் சுரு

நெஞ்சதுதன்னிலே வஞ்சியர்யெதிரிலே
றஞ்சிதமாகவே கர்க்க

சிரமதில்சடைமுடி யிலங்கிதுலங்கியேமின்ன
இருசெவியில்
சிரந்தகுண்டலம்தகதகவென்றுமே துன்னகரமதிலே
பரமதைசெபம்செய்யும் பஞ்சாக்ஷரமதுபன்ன
மார்பில்தரித்த
பத்தியுடனிலங்கு பூனூலதுவொளியென்ன
முனிவர்தானும் சுரு

புத்தியில்வஸ்துவை நித்தமும்பணிபவர்
நத்திடும்பேர்களை நித்தமுங்காப்பவர் கர்க்க

நாலுவேதம்ஆறுசாஸ்திர முணர்ந்திடும்சீலன்
மனதுதன்னில்
நஞ்சுண்டகண்டனை நாடிதுதித்திடும்லோலன்
பாதங்கள்தன்னில்
சாலவேமிதியடி தரித்துநடந்திடும்பாலன்
சந்தோஷமாக
சங்கதிவுமைக்குமே சாற்றவந்தபனுகூலன்
இந்தவிதமாய் சுரு

சத்தியந்தவரிடா நித்தியானந்தனே
புத்தியில்மறவாத உத்தமமுனிவரும் கர்க்க

கூடலூர்தாலுக்கா வண்டிநகரமதில்வாசன்
சின்னைய ஆழ்வார்
குணமுள்ளபாரியாள் அன்னம்மாளீன்றிடும்நேசன்
அருணாசலம்

பாடினசரித்திரம் பரிவாய்கண்டுகொள்நான்தாசன்
பிரமோத்திரகாண்டம்
பார்த்துமேநாடகம் பண்ணினேனதிவிசுவாசன்
இதையும்நீங்கள் சுரு
பாலனைப்போலவே சாலவேயெண்ணி
சீலமாயெந்தனை மேலதாய்காப்பீர் கர்க்க

உமைசொல் தரு.

சருணமுந்தன் திருவடிக்கு தாளிக்கேகோடியான்சருணம்
கருணையென்மேல்நீரும்வைத்து கார்த்திடுவீர்யான்பணிந்தேன்

கற்கரிஷிசொல் தரு.

சருணமென்றுதாள்பணிந்த தாள்பணிந்த
தையலரேசுகம் பெற்றுவாழ்வாய்
தருணமிந்தகாட்டிலேநீ காட்டிலேநீ
தனியாயிருப்பதென்ன சொல்லுமம்மா

உமைசொல் தரு.

சொல்லுவேன்கேள் ஐயரேநான்ஐயரேநான்
சூட்சமதாகவேநான் உந்தனுக்கு
நல்லமனதாகவேநான் ஆகவேநான்
நலமாகப்பாலகனை கண்...னை...

கற்கரிஷி சொல்தரு.

பாலகனைக்கண்டதினல் நீகண்டதினல்
பரிவுடனநானுமே சொல்லுகிறேன்
சாலவுமேவுந்தனுக்கு அம்மாவுந்தனுக்கு
சங்கதிவிபரமாய் சொல்வேனம்மா

உமை சொல் கவி.

பாதாரவிந்தந்தன்னை பாவையாள்போற்றுகின்றேன்
காதலாயிவ்வனத்தில் கனிவுடன்வந்துயானும்
தீதில்லாபாலன்தன்னை தீவிறமாகயானும்
நாதனைகண்ணுல்கண்டேன் நங்கையுமென்னசெய்வேன்.

உமை சொல் தரு.

முனிநாதாவந்தனம் தந்தேன்
மொய்குழலாருமே கொய்யுமலர்கள்சாற்றி முனி
கனிவாகயெந்தன்மேல் கருணையதுவுங்கொண்டு சரு
காத்திடவேயெண்ணி நேத்தியாகவந்த
சாஸ்திரமுணர்ந்தவா சுருணம்சருணமையா முனி

கற்கரிஷி சொல் தரு.

பிரமகுலத்தில்வந்திடும் நல்ல
பிரியமுள்ளவுமையே அருமையுடன்வாழ்குவாய் பிரம
தருமம்யேற்றுண்ணுகின்ற தையலேதனியாய்நீயும் சுரு
சந்ததநீயுமே மைந்தனையேந்தியே
இந்தவிடந்தனிலே வந்ததைசொல்லுவாய் பிரம

உமை சொல் தரு.

வந்தேன்நீரோடைதனக்கு நான்
வண்ணமாய்ஸ்நானம் பண்ணவேநினைந்து வந்
சந்தமாய்யருகில் சதிருடன்வந்தேனையா சுரு
சாற்றிடும்பாலனும் நேர்த்தியுடனழவும்
பார்த்துநானுமிதை பறதவித்திடலானேன்

கற்கரிஷி சொல் தரு.

மாதேநீஜஞ்சவேண்டாமெ உன்மனதின்கவலை
தினமும்சந் தோஷம்கொள்ளும் மா
பேதகமதுயில்லாமல் பிரியத்துடன்கேளம்மா சுரு

பிள்ளையின் சேதியை கள்ளமில்லாமலே
மெள்ளெனசொல்லுகிறேன் சள்ளைதவிர்த்துமே

உமை சொல் கவி.

பாதாரவிந்தந்தன்னை பாவையாள்போற்றிசெய்தேன்
காதலாய்ஸ்நானஞ்செய்ய கனிவுகொண்டிங்குவந்தேன்
தீதில்லாபாலனுக்கு திக்கிதுயில்லாமல்தான்
நாதனேயிருக்குதையா நங்கையாளெனக்குக்கூறும்.

உமை சொல் வசனம்.

கேளும் முனிநாதரே உமது பாதார விந்தத்தை அடியாள் பணிந்தேன் இப்பவும் என குழந்தையை நான் தூக்கிக்கொண்டு இந்த நீரோடைக்கு ஸ்நானம் செய்யவந்தேன் இங்கு நீரோடைக் கரைமேல் கிடத்தியிருக்கிறது இதன்வறலாரு தெரிவிக்கவேண்டும் முனிநாதரே.

கற்கரிஷி தரு ரூபகம்

மங்கையே வறலாருசொல்வேன் கேளம்மா
வாகுடனே போகம்பெற்று
வாழ்குவாய்சுகமாக யெந்தனுளுமே

உமை சொல் தரு.

ஐயனேயரியச்சொல்லும் மெய்யனே
ஆதியானசோதிபாதா என்னை
ஆளவேயடிமைகொண்ட துய்பனே

கற்கரிஷி சொல் தரு.

சாலவும்விதர்ப்பதேசம் ஆண்டிடும்
சத்தியாதனன் உத்தமனை
சண்டையில்துஷ்டர் கணவனைக்கொன்றிட்டார்

உமை சொல் தரு.

ஏலவேயிவ்வார்த்தைசொன்னீர் நாதனே
எந்தனுக்கு விந்தையாக
எண்ணுதேமனம்வேருக நண்ணுதே

கற்கரிஷி சொல் தரு.

சதியெனும்பெண்யிக்குழந்தை அன்னையாம்
தன்புருஷன் தன்னைத்தேடி
சாற்றுமிக்கானகம்வந்தாள் முன்னமே

உமை சொல் தரு.

கானகம்வந்தாளென்றுமே சொன்னீரே
காலமான கோலத்துடன்
கன்னியாள்சதியும்யெங்கு சென்றுளோ

கற்கரிஷி சொல் தரு.

புருஷனையிவ்விடம்தேடி வருகையில்
பெண்மயிலாள் வண்மையுடன்
பெற்றனள்யிந்தப்பாலனைக் காட்டிலே

உமை சொல் தரு.

பெற்றவளிதைவிட்டெங்கு சென்றனள்
பேதைக்குநீர் நீதியுடன்
பிரியமாய்புகன்றிடுவீ ரையனே

கற்கரிஷி சொல் தரு.

உதிரத்தைசுத்திசெய்யவே வந்தனள்
ஓடைதன்னில் நாடியேதான்
உத்தமியிராங்கமுதலை விழுங்கிற்று

உமைசொல் தரு.

தாயுந்தந்தையில்லாயிந்த சேயனை
தன்மையுடன் நான்வளர்க்க
சற்குணவுபாயமொன்று சாற்றுவீர்

கற்கரிஷி சொல் கவி.

உமையெனுமாதேகேளாய் உன்னிடகுழந்தையோடு
அமையபெடுத்துச்சென்று அன்புடன்வளத்தாயானல்

இமையவர்புகழத்தக்க மிவன்பலம்சொல்லொணாது
நிமைப்போதிலிவனைக்கொண்டு நீயுமேயெகுவாயே.

வசனம்.

இவன் விதர்ப்ப தேசாதிபதியாகிய சததியாதன மகாருஜன் பிள்ளை இவன்தகப்பனை பகையாளியாகிய துன்மருஷண மகாருஜன் அவனைக்காட்டில் கொண்டுபோய்கொன்றுவிட்டான் இவன் தாய்வயிற்றில் பத்துமாத கெற்பம் தாயானவள் புருஷனிறந்துவிட்டானென்று கேள்விப்பட்டு காட்டில்தேடிவரும்போது இவன் பிறந்துவிட்டான் நீரோடையில் உதிரங்களை சுத்தம்செய்ய கரையில் குழந்தையை கிடத்திவிட்டு நீரிலிறங்கினுள் முதலே இவன் தாயாகிய சதியை விழுங்கிவிட்டது அம்மா.

உமை சொல் தரு.

தினதந்தினு-என்று-வர்னமெட்டு.

இந்தநல்லகுழந்தைதன்னை யெடுத்துபோய்வளர்த்தால்
இதனாலேயென்னபலன் கிடைக்குமையாயெனக்கு

கற்கரிஷி சொல் தரு.

நல்லபயன்கிடைக்குமம்மா நாடியேவளர்த்தால்
நஞ்சுண்டகண்கூறருள் நன்மையுடன்தருவார்

உமை சொல் தரு.

தருவாரென்றுசொல்லவந்த தவமுனியேகேளும்
சந்தோஷமாய்பாலகனை தானெடுத்துவளர்ப்பேன்

கற்கரிஷி சொல் தரு.

வளர்த்துவந்தாலதிகசுகம் வண்மையுடன்பெருவாய்
வனிதையரே ஆசிரமம்போய் வாரேனம்மாநானும்

பொது வசனம்.

இப்படியாக கற்கமுனிவர் பிள்ளையின் வறலாரைகூரி தனது ஆசிர்மம் சென்ற பிறகு உமை இரண்டு குழந்தைகளையும் யெடுத்துக்கொண்டு ஏகசக்கிரபுரி பட்டணம் வருவது.

உமை சொல் தரு.

உத்தமிவுமையாள்தானும் உண்மையுடன்பாலகனை
பத்தியேகரத்தால்தூக்கி பண்புடன்வாருள்

நீரோடைக்கரையைவிட்டு நேர்மையாய்ப்பட்டணம்ஞடி
ஆருமெதிரில்லாமலே அன்புடன்வாருள்
சஞ்சலமதுயில்லாமல் சந்தோஷமனதில்கொண்டு
வஞ்சியும்காட்டில்நடந்து வண்மையாய்வாருள்
புருஷனிறந்தவசனம் பிள்ளேகளால்மனமகிழ்ந்து
இருபாலரையெடுத்து ஏந்திழைவாருள்
உபாதானபிச்சைவாங்கி உண்மையானபாலகரை
கவனமாய்காப்பாற்றிடவே கன்னியும்வாருள்
ஏகசக்ரநகரம்தேடி யின்பமுடன்தானடந்து
சோகமாகபிரம்மகுல தோகையும்வாருள்

உமை சீசபத்தியம்.

ஏகசக்ரநகறத்தில் என்பாலரிருவர்க்கும்
எடுத்துபிச்சையது கொண்டுவந்து
பாகமாயளித்துமே பரிவுடன்காப்பாற்றி
பசிதாகமில்லாமல் வளர்த்துவாரேன்
சாகவேகணவனும் சஞ்சலங்கொண்டுமே
தாணியில்கைம்பெண்ணுய் தயங்கலானேன்
நோகவு பாலர்கள் சோகமதுமிகவாகி
நொந்துமே தவிக்கிருர் என்னசெய்வேன்
சத்துசித்தானந்த மானபொருளே
நத்திடுமென்மீது கிருபையருளே
சித்தவைத்தெந்தனது சிருவர்தன்னே
பத்தியாய்காப்பாற்றி பாகமருளே.

பொது வசனம்.

இவ்விதமாக உமையென்னும் பிராமண ஸ்திரியானவள் இரண்டு குழந்தைகளேயும் யேகசக்ரபுரியில் வைத்துக்கொண்டு வரும்போது எப்பொழுதும்போல் உபாதானம் வாங்க வருகிறவிதங் காண்க.

உமை சொல் தரு.

அள்ளியள்ளி-என்ற-வர்னமெட்டு.

ஆரம்மாகிரகத்தில் அன்புடன்யெனக்குமே
அன்பாகபிச்சைபோடுவீர் தாய்மார்களே
அன்பாகபிச்சை போடுவீர் சுரு

அஞ்சியேவுங்களை கெஞ்சிவுபாதானம்
ரஞ்சிதமாகேட்டேன் வஞ்சியேபோடுவீர் ஆரம்

பாலகரிருவரும் பசியால்களைத்துமே
பாரினில்சோர்ந்துவிழுகிறார் தாய்மார்களே
பாரினில்சோர்ந்து விழுகிறார் சுரு

பக்ஷம்வைத்துநீங்கள் இஷ்டம்பொருந்திய
லக்ஷணமாகவே பிச்சையளித்திடும் ஆரம்

உங்கள்பிள்ளைபோலவே உண்மையாகயெண்ணியே
உகந்தளிப்பீரமுதை தாய்மார்களே
உகந்தளிப்பீ ரமுதை சுரு

உத்தமிமார்களே சித்தத்தில்கிருபை
மெத்தவும்கொண்டுமே நத்திபோடுவீரே ஆரம்

ஆருங்கெதியில்லையே அரும்பாவியெனக்குமே
ஆதரித்துபிச்சைபோடுங்கள் தாய்மார்களே
ஆதரித்துபிச்சை போடுங்கள் சுரு

அத்துவிதமான வஸ்துவையனுதினம்
புத்தியில்நினைந்து இத்திசைவந்தேனே ஆரம்

உமை சொல் கவி.

மக்களா உங்களுக்கு மகிழ்வுடன் பிச்சைவாங்கி
கைக்குள்ளே கொண்டுவந்து கடுகிசாதம்சமைத்து
இக்கணம் கொடுக்கிறேன்பான் யேதுக்கும் அஞ்சவேண்டாம்
சொக்கியே யிருக்கநீங்கள் சோருதென் னுவியப்பா.

வசனம்.

அப்பா பாலகர்களே இதோ உபாதானம் ஏற்றுவந்தேன் நீங்கள் சோங்கியிருப்பதை என்கண்ணால் கண்டால் வயிருபற்றி எரிகிறது சற்றுநேரம் பொருத்தால் நிமிஷ நேரத்தில் சமைத்து உங்கள் பசிதீர அன்னமளிக்கிறேன் சண்மணிகளே.

பொது வசனம்.

இவ்விதமாக உமை என்னும் பிராமணப் பெண்ணானவள் பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட விதிவந்துதே என்று துயரப்பட்டுக்கொண் டிருக்கும்போது சாண்டில்லியர் அப்பட்டணத்தை நாடிவருவது.

85493

சாண்டில்லியரிஷி சொல் கவி.

பரமனைசிந்தைதன்னில் பண்புடன்தியானஞ்செய்து
திரமானகாவிவேஷ்டி சீருகயிடையில்கட்டி.
சரிவறவுமையாள்பக்கல் சந்தோஷவார்த்தைசொல்ல
பரிவானசாண்டில்லியர்தானும் பாவைமுன்வருகின்றாரே.

தரு.

சாம்பசிவனைப்போற்றியே   நல்ல
சர்சனர்வணங்கியே   மெச்சிடும்யோகியர்
சாண்டில்லியமுனிவர்   வந்தார்
பாம்பணிகண்டரை   பத்தியாகபூசித்து
பூம்பாதம்தன்னிலே   பொன்மிதியடிபூண்டு   சரு
புத்தியும்வித்தையும்   அத்தமுமுடையவர்
கர்த்தனையனுதினம்   சித்தத்தில்நினைப்பவர்   சாம்ப

கானகந்தனில்வசிப்பேன்   நல்ல
கனிகளையின்பமாய்   இனிதுடன்கொய்து
கடும்பசியாய்ப்   புசிப்பேன்
நானிலம்தனில்யானும்   நன்மையானவுமைக்கு
வேணவார்த்தைபுகன்று   விருப்பமுடன்வறவே   சரு
விற்பனமாகவே   கற்புள்ளமங்கைக்கு
செப்பவேநல்மொழி   ஒப்பியேவந்தனன்   சாம்ப

சடைமுடிதானிலங்கவே   நல்ல
சந்தோஷமாகவே   விந்தையுடனேயிதோ
இடையில்புலிதோல்   துலங்கவே

படபடவென்னவே பாரில்நடைநடந்து
குடைகளம்பிடித்துமே குலுங்கநகைத்துமிதோ சுரு

குற்றமில்லாமலே பத்தியேமனமது
சற்றுமஞ்சாமலே வெற்றிபெறவேவந்தேன் சாம்ப

கூடலூர்தனில்வாசனும் நல்லவன்னியர்குலமதில்
தன்னிகரில்லாத நாடும்வீறப்பதாசனும்
தேடியிச்சரிதையை நாடியேஅச்சிலிட்டார்
பாடியவர்இவர்க்கு பண்பாய்கொடுத்ததினுல் சுரு

பன்னியதேவரும் இன்னிலத்தோர்களும்
நன்னயங்கூரிட தன்னிகரில்லாமல் சாம்ப

பொது வசனம்.

இவ்விதமாகச் சாண்டில்லியரிஷியானவர் வந்தவுடன் உமை என்னும் பிராமணஸ்ரீ பணிந்து கொள்வது.

உமை சொல் தரு.

போற்றிசெய்தேன்யானே பூவையாளும்தானே
மாற்றிதுயாவும்மாதவ ஒழிப்பீரே போ

சஞ்சலமாயித் தாறணிவிருந்த
விஞ்சிபென்முன்வந்த மலரடிபணிந்து போ

சற்குணசருணம் தயவுசெய்தருணம்
இக்கணத்தில்நானே யேற்றிதுதித்தேன் போ

பூவையாள்தனக்கு பொருந்தும்காட்சிதந்தீர்
பாவையானுமுந்தன்பதம் பணிந்துபோற்றிசெய்தேன் போ

சாண்டில்லியரிஷி சொல் கவி.

பாதாரவிந்தம்தன்னே பணிந்துமேநின்றதாலே
நீதுகளில்லாமல்தான் தீறமாய்சுபங்கள்பெற்று
சாதகமாகவாழ்வாய் சஞ்சலம்கொள்ளவேண்டாம்
போதவேயிருப்பாயம்மா பூவையேயெழுந்திருயே.

சாண்டில்லியரிஷி சொல் வசனம்.

கேளும் பிராமண குலமாதே மாகாருசியாய் இன்று முதல் சுகமாக வாழ்குவாய் எழுந்திருமம்மா.

உமை சொல் கவி.

எந்தனிடம்மனதுதான் மகிக்ஷிகொள்ள
இங்குவந்தமுனியேயுன் இருதாள்போற்றி
விந்தைபெறயெனக்குவந்த துயரம்தன்னை
வீருடனேயெக்காலம் துலைப்பேனையா
சந்ததமும்திருவாக்கா லதையெனக்கு
சாற்றுவீர்சங்கதியை உணர்ந்துநீரும்
பந்தமாய்சிலகாலம் வாழ்ந்திருக்க
பறிவாகவாழ்கவறமதுதான் பகருவீறே.

உமை சொல் வசனம்.

கேளுமையா சுவாமி நானிந்த இரண்டுகுழந்தைகளை யேக சக்கிறபுறத்தில் வைத்துக்கொண்டு ஐயம் ஏற்றுண்டு கஷ்டப்பட்டிருக்கும் காலத்தில் சாக்ஷாத் பரமசிவத்தைபோல்வந்த முனி நாதர் எனக்கும் பிள்ளைகளுக்கும் எப்போதும் இந்தகஷ்டம் துலையும் எந்தகாலம் சுகப்படுவோம் சுவாமி.

சாண்டில்வியரிஷி சொல் தரு.

தரித்திரங்கள்பட்டுழன்ற தையலேநீகேளுமே
சஞ்சலங்கள்கொள்ளவேண்டாம் தயவுடனேமீளுமே
பொருத்தமாகவுனுரைப்பேன் புத்தியுடன்கேளுமே
பிஞ்சகரைநீதுதிப்பாம் பிரியம்வைத்துமீளுமே

உமை சொல் தரு.

சஞ்சலங்கள்கொண்டுழன்றேன் சுவாமிமுனிநாதனே
தக்ஷணத்தில்என்முன்வந்த தன்மையானபாதனே
பஞ்சைபோலவுன்வறவை பார்த்தேன்கண்ணால்வேதனே
பாதுகார்த்துசுகமளித்து பக்ஷம்வைப்பாய்நீதனே

சாண்டில்வியரிஷி சொல் தரு.

முன்னேபிரமகுலமதில் மொய்குழல்நீபிரந்திட்டாய்
அன்புடன்வேதியனுன்னை அழகாகமணந்திட்டான்
தென்புகொண்டுநீங்களும் திரண்டஆஸ்திபெற்றுமே
சம்பிரமாகதானதருமம் தாறணியில்யில்லையே

உமை சொல் தரு.

முப்பிறவிசென்மமதை மொழிந்திட்டயென்சாமியே
இப்பிறப்பில்பிரந்துண்ண யென்னவிதிநேமியே
அப்பிரவியென்னகெதி அடைந்திருந்தோசாமியே
அதையெனக்குவிபறமாக அரையுமிந்தபூமியில்

சாண்டில்லியரிஷிசொல் கவி.

முன்னையபிரவிநீதான் மொய்குழல்பிராமணஸ்திரீ
தன்மையாம்பிராமணர்க்கு சம்பிரமமாய்மனைவிபாகி
இன்பமாயிருக்கும்போது யியலானதானதர்மம்
கனிவுடன்செய்யாதாலே கஷ்டங்களடைகிறீரே.

வசனம்.

கேளும் பார்ப்பினியே நீமுன் ஜென்மத்திலும் பிராமணகுலத்தில் தான் பிறந்தாய் உன்னை ஒருவேதியன் மணம்புரிந்து அதிக செல்வமும்பெற்று வாழந்துவரும் நாளில் பிக்ஷையிட்டு உண்ணுமலும் தானதருமம் பரோபகாரா மில்லாமலும் இருந்தபடியால்உன் புருஷன் இரந்து நீயும் உன்பிள்ளையுமாக இப்பட்டணத்தில் பிக்ஷையெடுத்து சாப்பிடநேரிட்டிருக்கிறது யிப்போது உனக்கு காட்டில் கிடைத்த குழந்தையின் வறலாரு சொல்லுகிறேன் கேளும் பார்ப்பினியே.

உமை சொல் வசனம்.

அப்படியே சொல்லும் சுவாமி.

சாண்டில்லியரிஷி தரு. சிந்து

பிரம்மகுலம்தன்னில் வந்தமாதே--நானும் பிரியம்வைத்து சொல்லுகிறேன் அரிவையேநீகேளும் தருமவானுந்தனிளையமைந்தன்-அவன் சங்கதியைநானுமிப்போ சாற்றுகிறேனம்மா நல்லமதுரை நகர்தன்னை - இவன் நலமாகப்பாண்டியனுங் குலவியரசாண்டான் வல்லசத்திராதியர்கள்கூடி - அந்த மதுரைநகர் தன்னையவர் மடக்கிகொள்ளநாடி படையெடுத்து சண்டைக்கு வந்தார்கள்-அப்போ பாண்டியன் சொக்கலிங்கர்க்கு பணிந்து பூசைசெய்ய விடையேரும் யீசாவென்று போற்றி-அங்கே விற்பனனிருக்கவேதான் தற்செயலாய்தூதர்-படையெடுத்துவந்த சேதிசொல்ல - மன்னன் பாதிபூசைதனைநிருத்தி-பண்புடன் சென்றானே. (தந்தின)

சாண்டில்லியரிஷி சொல் கவி.

பறமனூர்பூசைதன்னை பதியில்விட்டதாலே
குமையவ்யதாகியங்கே கூரிடும்விதர்ப்பதேசம்
பரிவுள்ளசத்தியா தனனாகி பண்பானவெதிரியாலே
சரிவறமடிந்தானம்மா சங்கதியின்னங்கேளே.

சாண்டில்லியரிஷி வசனம்.

கேளுங் பிருமணமாதே இந்த சத்தியாதனன் முன் சென்மத்தில் மதுரையில் பாண்டியனாக பிறந்து அரசுசெய்து வரும்நாளில் பகையாளி சண்டைக்கு படை எடுத்துவந்தபோது சொக்கலிங்கறை பூசைசெய்துகொண் டிருக்கும்போது தூதுவர்ஓடிசொன்ன மாத்திரத்தில் பாதிபூசையை நிருத்தி சண்டைக்குபோய் எதிரியை செயமடைந்தான் மருபடி பூசையை நிறைவேற்றாமல் விட்டதினால் அற்ப ஆயுளாயிறந்துவிட்டான் இன்னு கேளுமம்மா.

சாண்டில்லியரிஷி சொல்தரு.

(சோமசேகற என்ற வர்னமெட்டு.)

இன்னும்நான்சொல்லுகிறேன் கேளும்கேளும்
இவனும்பாண்டியன்மகவாய் நாளும்நாளும்
பன்னியேசீவித்துவந்தான் மீளும்மீளும்
பாவையாளும்கொலைபுரிந்தாள் கேளும்கேளும்

உமைசொல் தரு.

கொலைபுறிந்தபாவமது என்னசெய்யும்
கோதையானும்மகிழ்சி கொண்டேனையா
கல்வியானதாயாரவள் போனசேதி
சங்கதியைசொல்லுமுனி நாதபோற்றி

சாண்டில்லியரிஷி சொல்தரு.

கொடியபாவம்செய்ததினால் முன்னேமுன்னே
மடியூமாலைதின்றதுவே சொன்னேன்சொன்னேன்
வடிவுடனிந்தபாவந்தான் நாடிநாடி
சடுதியில்சம்பவித்ததே கூடிகூடி

உமைசொல் தரு.

தரித்திரங்கள்தீரும்வகை சொல்லும்சொல்லும்
சுவாமிமுனிநாதாயிதை புல்லும்புல்லும்

மருங்குடன்பாலன்வளர்ந்து யென்னசெய்வான்
வாயினல்மகிழ்ந்தெனக்கு சொல்லும்சுவாமி

சான்டில்லியரிஷி சொல்கவி.

மங்கையேயவுமையேநீ௱ளாய் மகனெனுமிளையோனுக்கு
சங்கையில்லாமலிந்த தாணியாம்விதர்ப்பதேசம்
பொங்கமாய்யெதிரிதன்னை போர்செய்துயாளப்போருன்
நங்கையேமூத்தமைந்தன் நலமாய்தன்தொழில்செய்வானே.

வசனம்.

உனது இளையகுமாரன்தன் எதிரியை செயமடைந்து, விதர்ப்பதேசம் ஆள்வான் தன் மூத்தமைந்தன் பிராமண குலத்தொழில் செய்வான் அது எப்படியென்றால் பிரதோஷ விரதமென்றொரு விரதமிருக்கிறது, அதை நீங்கள் மூவரும் பக்திவிசுவாசத்தோடு யிருப்பீர்களானல் அதனல் சுகப்படுவீர் பார்பினியே.

உமை சொல் கவி.

அப்படியேதானேசெய்குவோம் அருமையாம்விரதம்தன்னை
செப்பினல்அதுபோலாக செய்கிறோம்தடையுமில்லை
தப்பிதமில்லாமல்தான் சங்கதிதெரியச்சொன்னல்
ஒப்பியேமூவர்தானும் உகந்துமேசெய்வோம்போற்றி

வசனம்.

அப்படி விரதத்தின் வறலாரு தெரிவித்தால் அதுபோல நடக்க சித்தமாக காத்துகொண்டிருக்கிறோம் முனிநாதரே.

சாண்டில்லியரிஷி சொல் தரு.

பிர்மகுலத்தில்வந்த மங்கையேநீங்கள்
பிரியமாய்சிவபிரான் தன்னையே
திரமானபிரதோஷம் தன்னில்டமன்தன்னை
சிந்தையில்தியானம்செய்தால் வந்திடுமதிகசெல்வம்

உமைசொல் தரு.

வருமென்றுசொன்னமுனிநாதனே அந்தபூசை
வழுத்தும்தெரியநன்றாய் நீதனே
மருமமில்லாமலேபனது சந்தோஷமாய்
அருமையாய்யெங்களுக்கு அரியஉரைப்பீர்நாதா

சாண்டில்லியரிஷி சொல் தரு.

அரியஉறைத்திடுவேன் கேளுமேநீங்கள்
அந்தசிவனையெந்த நாளுமே
பெருமையுடன்துதித்தால் பிழையொன்றமில்லைசொன்னேன்
பித்தன்பாதத்தைநீயும் சித்தத்தில்நிருத்துவீர்

உமை சொல் தரு.

அப்படியேசெய்கிறேன் மையனே-எங்களை
ஆதரித்திடவந்த துய்யனே
நற்படியாகசெய்யும் நாதாசிவபூசைக்கு
நல்லமுறையெனக்கு சொல்லுவீர்முனிநாதா

சாண்டியல்லியரிஷி சொல் கவி.

பிரதோஷகாலந்தன்னில் பிரியமாய்சிவனைநீங்கள்
சரிவறதுதிப்பீருகில் சந்தோஷம்கொள்வீரிப்போ
நெரிபானபூசைதன்னை நிறைவேற்றும்வகைசொல்வேன்
அரிவுள்ளமாதேநீயும் அவ்விதம்செய்குவாயே.

சாண்டில்லியரிஷி சொல் வசனம்

கேளும் பிற்மகுல மாதே மாதத்தில் பூருவபக்ஷம் அமற பக்ஷம் என்று இறண்டுண்டு அதில் பிறதோஷவிரதம் நீங்கள் மூவரும் பக்த்தியோடு அனுசரித்தால் சுகமாயிருப்பீர் அதின் மகிமையை சொல்லிக்கொண்டு வருகிறேன் கேளும் பிறமகுலமாதே.

சாண்டில்லியரிஷி சொல்தரு.

அரிவுடன்கேளும் விரதத்தின்முறமையைநாளும்
சரிவரசொல்லுவேன் சந்தோஷம்கொண்டுமே
பரிவுடன்கேளம்மா பார்ப்பினியாளேநீ அரி

சாமியைகோரிநீங்கள் சம்பிறமாய்தேரி
பூமியில்விறதத்தை புரியுங்களின்பமாய்
க்ஷேமத்தையடைகுவீர் சிறப்பாகசொன்னேன்யான் அரி

விடையேருமீசன் அன்பர்தன்னை விருத்திசெய்நேசன்
கடினமாய்யுங்களை காக்கதடையிருது
அடிமைகொண்டவர்பாதம் அன்பாய்துதியுங்கள்
வில்வத்தைகொண்டர்ச்சித்தால் திருநன்மையுமுண்டு
பொல்லாங்குவாராது புண்ணியவதியேகேள்
செல்வம்பெற்றுநீங்கள் சிறப்பாயிருக்கலாமே அரி

சாண்டில்லியரிஷி சொல்வசனம்.

கேளுமம்மா இந்தசிவபூசையின்பலனானது ஐம்பொறிகளால் அனுபவிக்கத்தக்க மோக்ஷயின்பத்தை அறிந்து ஆனந்தம் அடையும்படி சிவனுடைய திருவடியை தருமமென்று வேதங்களில் சொல்லியிருக்கிறது ஆகையால் பிரதோஷவிரதம் ஒரு வருஷம் தவறாமல் செய்தால் சுகமுண்டு அவ்விதம் செய்யும் சிரோன் மணியே.

உமை சொல்வசனம்.

அப்படியே செய்கிறோம் பிள்ளைகளுக்கும் நாமகறணம் இட வேண்டும் முனிநாதா.

சான்டில்லியரிஷி சொல்வசனம்.

அப்படியே நாமகறண மிடுகிறேன் பிருமணமாதே.

சாண்டில்லியரிஷி சொல் தரு.

நாமகறணமிடுவேனிச்சிருவருக்கு நாமகறணமிடுவேன்
நேமமாகவேநித்தியா னந்தவஸ்துவை
தாமதமில்லாமல் சரியாய்மனதில்வைத்து சுரு

தற்பறசிற்பற நற்பதமானதை
இப்பொழுதுயெனக்கு இருதயத்தில்நிருத்தி

துய்யசுசிவிறதன் சொகுசானபிருமணபிள்ளை
பையவேதருகுத்தன் பறிவானருஜபாலன் சுரு

பார்தனில்மகிழ்ந்துமே சீர்பெருநாமும்
பேர்பெறவைத்துமே பிரியமும்கொண்டேன்

பிருமணபிள்ளைக்கு பேதமில்லாமல்
அருமையுடன்தனங்கள் அகப்படுமதனாலே சுரு

அல்லல்தனையொழித்து ஆதிசிவனருளால்
மெள்ளவேநீங்களும் மேன்மையடைகுவீர்

இளையோன்ருசபாலன் எங்கெங்குங்கீர்த்தியோங்க
பலமான அரசுகள் வண்மையுடன்புரிவான் சுரு

வாதுபுரிந்துமே நீதுசெய்யெதிரியை
நீதியாய்செயித்துமே பூதலமாளுவான்

நாமகரணமிடுகிற வசனம்.

கேளும் பிருமணமாதே உன் மூத்தவனுக்கு சுசிவிரதனென்றும் இளையவனுக்கு தருகுத்தனென்றும் நாமகரண மிட்டேன் மூத்தவனுக்கு தனம்கிடைத்து சுகமடைவான் இளையவன் அவன் தகப்பன் ஆண்ட விதர்ப்பதேசம் சென்று எதிரியைசெயமடைந்து வாழ்வீர்கள் நான் ஆசிர்மம்போய் வருகிறேன் பிருமண மாதே.

உமை சொல் வசனம்.

அப்படியே போய்வாரும் முனிநாதா.

பொது வசனம்.

இவ்விதமாக சாண்டில்லியர் வறங்கொடுத்து விரதத்தின் முறமையை சொல்லி பிள்ளைகளுக்கு நாமகரணமிட்டு ஆசிர்மம்போக பிள்ளைகள் வித்தியாப்பியாசம் முதலானதும் கற்று பிச்சை எடுக்கும்படி வருகிறவிதங் காண்க.

சுசிவிரதன் தருகுத்தன் வருகிற கவி.

சுந்தரமானமைந்தர் சோதியாய்பொருளைபோற்றி
அந்தமாய்கலைகள்தன்னை அடைவுடன்கற்றுணர்ந்தான்

நந்தனையளித்தநாத கருணையென்கடலேயென்று
முந்தியபிச்சைவாங்க முறையதாய்வருகின்றூரே.

சசிவிரதன் சொல் தரு.

சசிவிரதன்தருமகுத்தன் சொகுசாய்சிவனைபோற்றி
சுந்தரமாய்வந்துமேவினர் யாசகம்வாங்க
பசியால்வுடல்மெலிந்து பாரினில்மெள்ளநடந்து சசி

பத்தியதாகவே பரமசிவனைபோற்றி
கர்த்தனையென்றுமே உத்தமர்வந்தனர்

புத்தியரிவுடனே பெற்றதாயைரக்ஷிக்க
பிரியம்மனதில்வைத்து அருமையைவீட்டில்விட்டு சரு

பேசியேயிருவரும் நேசமதாகவே
ஆசைகள்கொண்டு பாசமாய்வந்தனர்
சற்குணநிற்குணமான சர்வதயாபரனை
சாசுவதபொருளைதங்கள் மனதில்லெண்ணி சரு

தற்பரனேயருள் ரர்ப்புதனே புவியில்
கற்பகம்போலவே காரும்காருமென்னை

சுசிவிரதன் சொல் கவி.

தம்பியேசொல்லக்கேளாய் தருமமும்வாங்கினூம்
சம்பிரமமாகயிப்போ சதிருடன்வீடுசேர்ந்தோம்
நம்பிடும்தாயாரண்டை நலம்பெறசமைக்கசெய்து
இன்பமாய்குளித்துவிட்டு இக்ஷணம்வருகுவேனே.

தருமகுத்தன் சொல் கவி.

அப்படிதானேசெய்யும் அண்ணுவேயடியேன்போற்றி
தப்பிதமில்லாதிந்த சலந்தனில்ஸ்நானம்செய்து
நர்ப்படியாகவந்தால் நானுமப்புரமேபோவேன்
செப்பினேன்சீக்கிரத்தில் சேருவீர்வீடுதானே.

பொது வசனம்.

இவ்விதமாக மூத்தவனுகிய சுசிவிரதன் ஸ்நானம் செய்யப் போய் நதியில் ஸ்நானம் செய்துவிட்டு கரையில் யேரிவந்து பார்க்கும்போது தங்கக்குடத்தில் பசும்பொன் வைத்திருக்கக் கண்டு யெடுத்துக்கொண்டுவந்து தாயாருகிய உமையிடம் சொல்லுவது.

சுசிவிரதன் சொல் கந்தார்த்தம்.

அம்மணி நானுமிப்போ ஆற்றுக்குஸ்நானஞ்செய்ய
செம்மையாய்போனேனங்கே சீருடன் தனமெனக்கு
நன்மையாய்கிடைத்ததம்மா நானுமேயெடுத்துவந்தேனம்மா
தன்மையா யென்னசெய்ய.

(தரு.)

சாற்றுவாய்நீயே-உந்தனையானும்
போற்றினேன்தாயே

சாற்றுவாய்யன்னையே சஞ்சலமில்லாமல்
மாற்றிடும்நம்மிட வருமைகள்தீர்ந்தது சாற்

உமை சொல் கந்தார்த்தம்.

என்னிடமைந்தாகேளும் எழிலுரும்விரதம்தன்னால்
தன்னிடமனதுதன்னில் சுவாமியும்கிருபைவைத்து
வன்மையாய்பொன்னைத்தந்தார் வருமைகள்தீரலாச்சு
இன்பமா யிருவர்தானும்.

(தரு.)

எடுத்துக்கொள்வீரரே—சந்தோஷமாய்
எடுத்துக்கொள்வீரரே
எடுத்துக்கொள்நீங்களும் தடுத்துசொல்லாமலே
அடுத்ததம்பியும்நீயும் அன்புகள்கொண்டுமே எடு

சுசிவிரதன் வசனம்.

தம்பி நான் ஸ்நானம் செய்யப்போன யிடத்தில் நாம் செய்த பிரதோஷ விரத மகுத்துவத்தால் கொஞ்சம் திரவியம் சுவாமி அனுக்கிறகம் செய்தார் நாமிருவரும் இத்திரவியத்தை பாகித்துக் கொள்ளலாம் வாரும் தம்பி தருகுத்தனே.

தருமகுத்தன் சொல் வசனம்.

அண்ணா சுவாமிக்கு விரதம்செய்த மகுத்துவத்தால் உனக்குக்கொடுத்தார் அதில் மூன்றுபைசாகூடவேண்டியதில்லை நீமாத்திரம்தானா விரதமிருந்தாய் நான் விரதம்மிருக்கவில்லையா உனக்கு கொடுத்த கடவுள் எனக்கு கொடுப்பார் வேண்டாம் அண்ணா.

பொது வசனம்.

இவ்விதமாக வேண்டாம் என்று தருமகுத்தன் தனியாகஒரு வருஷகாலம் விறதம்செய்துநதியில் ஸ்நானஞ்செய்ய வருகிறபோது ஏகசக்கிறபுரத்தில் இராணின்ற கெந்தர்வ ருாஜகுமாரத்தி அஞ்சுமதி தாதிமார் புடைசூழ நதிக்கு ஸ்நானம்செய்ய வருகிற விதம்.

அஞ்சுமதி வருகிற சொல் கவி.

கொடிமின்னல் இடையாள்மாது
கொஞ்சிய பஞ்சவர்னம்
வடிவுள்ள கிளியைபோலும்
வாய்மொழி அமிர்தமென்ன
நடைநொடி அபிநயங்கள்
நன்மையாய் சிறந்துவோங்க
அடியினில் நீராட
அஞ்சுமதியுமே வருகின்ருளே.

அஞ்சுமதி வருகிற தரு.

அன்னநடைதானடந்து அஞ்சுமதியென்னும்மாது
வர்னமயில்சாயலான வஞ்சியும்வாராள் அன்
முத்துகள்பளபளென்ன ரத்தினபணிகள்துன்ன
சத்ததண்டயங்குலுங்க சம்பிரமாய்வந்தாள் அன்
கங்கணகடகமின்ன வங்கியும்தகதகென்ன
மங்கைசிரோன்மணியாள் மாதிதோவராள் அன்

இடையில்ஒட்டியானமின்ன இருகாதில்கம்மல்ஜொலிக்க
தடையில்லாமல்நடந்து ஸைதயலும்வாராள் அன்

வண்டிநகர்தன்னில்வாழும் வாத்தியாறருணஜலம்
கொண்டதமிழ்தன்னைபாடி கோதையும்வாராள் அன்

வசனம்.

ஆனால்வாருங்கள் தாதிமார்களே நாமென்னமோஜலக்கிரீடை செய்யும்படி, வந்துவிட்டோம் நதியிலிறங்கி ஸ்நானம் செய்யலாம் வாடி.

அஞ்சுமதி சொல் தரு

தாதிகளாவாடி சந்தோஷமாகக்கூடி
நீதியுடன்நாடி நீங்களும்வாடிதேடி தா

ஜலந்தனிலிறங்கி சந்தோஷமாய்நாமும்
பலவகையாய்பாடி பண்பாய்வருவோம்மேவிதாவி
நந்தவனத்தில்சென்று நலமாய்புஷ்பம்கொய்து
விந்தையாககூட விருப்பமுடன்சென்றுயின்று
போங்களடிதாதி புஷ்பமெடுக்கநீங்கள்
தேங்காமலேநானும் திறமாயிங்கிறக்கபொருக்க

வசனம்.

ஆனால் வாருங்கள் தாதிமார்களே நாம் சலக்கிரீடை செய்து விட்டோம் நான் இங்கே தனியாய் இருக்கிறேன் நீங்கள்நந்தவனம் சென்று புஷ்பமெடுத்துவாருங்கள் நாம் வீடுபோகலாம் தாதிகளா.

தாதிசொல் வசனம்.

அப்படியே சென்று வருகிறோம்.

அஞ்சுமதிசொல் சீசபத்தியம்.

இவரோ மன்மதன்போலவே விளங்கியே
இவ்விடம்தனில்வந்து தனியதாக
இருக்கின்றசேதியு மின்னதென் றறிகிலேன்
என்மனது இவர்மேலே நாடுதேதான்
ஈசனுட கிருபையால் இவர்க்குமே மாலையது
இன்பமாய் சூட்டாமல் விடுவதில்லை
இவரிடம்யேகிநான் இன்பமாய் வறலாரு
யாவுமே கேட்டுநான் தெரிந்துகொள்வேன்

தாதிகளில்லாத வேளேமிதுவே
சப்பிறமாய்யிவருடன்பேச சமயமிதுவே
கோதில்மணமாலே சூட்டவேதான்
குணமாகசம்மதப் படுவாரோதான்.

அஞ்சுமதி சொல் தரு.

சுந்திரமுகவதனு ஜாலமென்னமோ
தையலும்நானுன்னே கண்டுதனிமையாய்வந்தேன்
எந்தவூரெந்ததேசம் எனக்குசொல்லுவாய்
இங்குவந்தகாரணத்தை தெரியவிள்ளுவாய்.

தருகுத்தன் சொல் தரு.

சொல்லுவேன்நான்கேளுமம்மா சுந்தரியாளே
சுத்தமானயேகசக்கிற புரத்திலிருப்பு
நல்லபிராமணகுலம் என்குலமம்மா
நாட்டிலுள்ளதாயார்தன்னே உமையாளென்பார்கள்

அஞ்சுமதி சொல் தரு.

கள்ளமாகநீர்வுரைத்தீர் கடிகிவார்த்தையை
காரிழையாள்நம்பமாட்டேன் கருத்தில்வையுமே
உள்ளபடிநானுமையே மாலேயிடவும்
உகந்துவந்தேன்விபரமதாய் உரைத்திடுவாயே

தருகுத்தன் சொல் தரு.

யாசகம்தான்யெடுக்கும் பிருமணநாச்சே
இச்சைகொள்ளயென்மீதில் என்னமதியோ
பாசம்காட்டயென்னிடத்தில் பேசவந்தாயே
பத்தியாய்யிவ்விடம்விட்டு ஏகிடுவாயே

அஞ்சுமதி சொல் கவி.

ஏகிடுமென்றுசொல்லி யென்னேயும்நழுகவிட்டு
பாகமாய்போய்விட்டாலே பண்புடன்வுயிர்தரிக்கேன்
சோகமும்யெனக்குமீறி துடிக்குதேபிருணம்தானும்
வேகமாய்வரலாருதன்னே விளம்புவீர்விளம்புவீரே

வசனம்.

என்னுசைக் குகந்த காதலா உன்னேப்பார்த்தால் பிராமண
குலமாக தோற்றவில்லே பிருமணகுலத்தில் இப்பேர்பட்ட ரூபல்யா

வன்னியத்துடன் இருப்பவரை கண்டதில்லை நான் என் தகப்பனரிய உன்னை விவர்கம்செய்ய தடையில்லை ஆதலால் தங்கள் வறலாற்றை சொல்லவேண்டும்.

தருமகுத்தன் சொல் கவி.

வரலாருசொல்லச்சொன்ன வஞ்சியேகேளாயிப்போ
சரிவரயெனக்குமேதான் சங்கதிதெரியாதம்மா
பரிவுள்ளயன்னையாளை பாங்குடன்கேட்டால்சேதி
தெரியுமேயவளையிங்கு சீக்கிரமழைத் துவாரேன்.

வசனம்.

கேளுமம்மா வறலாரு எனக்குதெரியாது தாயார் உமைக்கு தெரியும் நானை யின்னேரத்திற்கு இவ்விடம் இட்டுக்கொண்டு வருகிறேன் நீயு மிவ்விடம்வந்தால் வறலாம்தெரிந்துகொள்ளலாமம்மா

அஞ்சுமதி சொல் வசனம்.

நான் உன்னைதவிர வேறொருநாயகனையாலையிடுகிறதில்லை என் தகப்பனுரை இட்டுக்கொண்டு வருகிறேன் சகல சங்கதியும் பேசிக் கொள்ளலாம் நான் போய் வருகிறேன் நாதா.

அஞ்சுமதி சொல் கவி.

கன்னிதாதிகளேயிப்போ கடுகியேநதிக்குவந்து
துன்னியஸ்தானபானம் சுகமுடன்செய்துவிட்டோம்
பற்றியேபுஷ்பந்தன்னை பலவிதமாகச்சூடி
வின்னமில்லாமலிப்போ வீடுபோய்சேறலாமே.

வசனம்.

தாதிமார்களே நாம் நதிக்குவந்து ஸ்நானபானம் செய்து நந்தவனம்போய் புஷ்பங்கொய்து கூந்தலில் சூடிக்கொண்டோம் இனிமேல் வீடுசேர்வோம் தாதிகளே.

பொது வசனம்.

இவ்விதமாக அஞ்சுமதி வீடுசேர்ந்தபிறகு அஞ்சுமதி தகப்பனாகிய தேவகந்தருவராஜன் கொலுவாகவருவது.

தேவகந்தருவர் சொல் கவி.

எத்திசையும் கீர்த்திபெற்ற வீரதீரன்
எழில்பெருகும் அண்டமது கிடுகிடென்ன
கத்தியுமேகேடயங்கள் கரத்தில்தாங்கி
மனம்பெருகும் சிரமதிலே மவுலிபூண்டு
சுத்திலுமே மந்திரிகள் சூழ்ந்துநிற்க
சூராதிசூரர்களும் அடிவணங்க
வெற்றிபெரும் கொலுசபையை நாடியேதான்
மேன்மைபெரும் கெந்தருவ ராஜன்வந்தான்.

தரு.

தேவகந்தர்வராஜன் வந்தனனே-கொலுவை நாடி
தேவகந்தர்வராஜன் வந்தனனே சுரு

தேவகந்தர்வ ராஜன்வந்தான்
திக்குதிசைகளும் புகழ்பெருகிட
ஆவலாகவே பாவிகளையுமே
அரைநொடிதனில் தூரிதம்செய்திட தேவ

பரதநாட்டியமாத ராடிடவே- இருபுரத்தில்
பாவையர்களும் கவரிவீசிடவே சுரு

கரத்தில்கத்திகேடயம் துலங்கிட
கண்டவர்பயங்கரமுங் கொண்டிட
வாத்திலதிகம்பெற்ற தீரனும்
வாகுவல்லயம் துலங்கியிலங்கிட தேவ

வச்சிரமணிமுடி தகதகென்றிடவே மார்பில்தரித்த
வயிரபதக்கம் நிகநிகென்றிடவே சுரு

மெச்சிடும்படை புடைகள்சூழ்ந்திட
மேவிடும்வாத்தியங்க ளடிபட
சச்சிதானந்தனையும் போற்றிட
சாந்தனன்கொலு சபையைநாடியே தேவ

மானைக்கரந்தனிலேந்தும் யீஸ்பரனூர்கயிலைதன்னில்
மங்கைக்குடம்தந்தசங்கரர் சிவனார் சுரு

தேனைப்போலவர் பாதந்தன்னையே
தினமுமறவாமல் துதித்திட
சேனைகளுடன்கைநிலை மேவியே
தினமும்பாழ்கணை மீட்டிகொடுத்திட தேவ

தேவகந்தர்வர் சொல் கவி.

பிணகபாணிபரனைபோற்றி பிரியமாயென்னைக்காரும்
மனதில்யான்நினைகாரும்பெண்ணம் வகையுடன்முடிப்பவேணும்
தினம்யெந்தன் நகரம்தானும் சிறப்புடனிருக்கக்கண்ணால்
கனமுடன்பார்த்துநீரும் கருணைசெய்திடுவீர்போற்றி.

வசனம்.

பிணகமென்னும் வில்லையும் தாருகாவன ரிஷிகள்விட்ட மானை யும் கரத்தினிடமாகவைத்து கைலாயமே பீடமாக எழுந்தருளி இராநின்ற சாக்ஷாத்பரமசிவமே என்னையும் என்பட்டணத்திலுள் ள குடிகளையும் கார்ப்பதுமல்லாமல் என்மனதில் எண்ணும் யெண் ணத்தையும் யீடேற்றி ரக்ஷிக்கவேண்டும் கர்த்தனே.

அஞ்சுமதி சொல் தரு.

செந்தமிழ்-என்ற-வர்னமெட்டு.

என்னையருமையாக யின்பமாயீன்றிடும்
எந்தையேயான்சருணம் உந்தன்பாதத்தில்
தந்தேனிதுவே தருணம் சுரு

சந்ததமாகநான் விந்தையுடனேவும்மை
எந்தன்கரமதால் ஏற்றிதொழுதிட்டேனே
யீடேற்றிக்கார்க்கவேணுமே வஞ்சியாள்நானும்
யேற்றிபோற்றினேன் நானுமே என

கந்தர் சொல் தரு.

கண்ணேயென்கண்மணியே கற்புள்ளபடமானே
கனமும்பொருந்திடுவாயே சுகம்பெற்றுமே
தினமும்வாழ்ந்திடுவாய் நீயே சுரு

கர்த்தனையனுதினம் நித்தமும்துதித்திட்டால்
மெத்தசந்தோஷமாய் உத்தமியாகவே
காக்ஷிபெற்றுமேயிருப்பாய் உலகுதனில்
தாக்ஷியில்லாமல் இருப்பாய் கண்

அஞ்சுமதி சொல் தரு.

நீராடப்போனேனையா நேர்மையுடன்நதிக்கு
நேரில்கண்டேனொருவரை அவர்போலழகு
பாரிலில்லை யென்னசெய்குவேன் சுரு

பாசமதாகவே நேசித்துயானுமே
பேசியேவறலாரு ஆசையாகக்கேட்டேன்
பக்ஷமானாளைக்குசொல்லுவேன் என்றுரவரும்
உத்தமிவந்தேன் புல்லுமே நீரா

கந்தர் சொல் தரு.

நல்லதுன்மனம்போல நாயகன்தன்னைநாளும்
நாடியேசங்கதிதன்னை விசாரித்துமே
தேடியேமங்கிலிய முன்னே சுரு

தேனெனுமொழியாளே மானெனும்விழியாளே
கோனெனுநாயகனை நானேபார்த்திடவேணும்
கொஞ்சியேபஞ்சவர்ணமே எந்தன்மகளே
ரஞ்சிதமான சொர்ணமே நல்ல

அஞ்சுமதி சொல் வசனம்.

தந்தையே நான் நீராட நதிக்கு சென்றபோது அங்கு ஒரு நாயகனைக்கண்டேன் அவரையே எனக்கு மணவாளனாகவேணும் தந்தையே.

கந்தர்வர் சொல் வசனம்.

அவர் எந்த ஊரம்மா.

அஞ்சுமதி சொல் வசனம்.

அதேயிடத்தில் அவர் தாயாரை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன் என்றார் நானும் உம்மையிட்டுக்கொண்டு வருகிறேன் என்றேன் வாரும்போகலாம் அப்படியேபோகலாம் குமாரத்தியே.

பொது வசனம்.

இப்பால் தருமகுத்த மகாராஜனும் தாயாகிய உமையை இட்டுவந்து யெல்லோரும் கூடிபேசி முதல் சுசிவிரதனுக்கு பெண்பார்த்து முகூர்த்தம் முடித்துவிட்டு அஞ்சுமதிக்கும் தருமகுத்தனுக்கும் விவாகம் நடக்கிற விதங்காண்க

கலியாண தரு.

ஐங்கரனைப்	போற்றிசெய்து-நானும்
ஆதிசிவன் தனைத்	தோத்தரித்து
மாப்பிள்ளையும்	பெண்ணுமதை-அவர்கள்
மனக்கோலமாக	அலங்கரித்து
அம்மிவலமாக	அரசாணிக்கால்முன்பாக
செம்மையுடன்	சால்கறகம்
சீருடனே	முன்னேவைத்து
சீலமுடன்	பாலிகையும்
சிரப்பாக	வைத்தார்கள்
விக்கினரைப்	போற்றிசெய்து
வேதியர்கள்	வேதம்சொல்ல

கலசமதுதானிருத்தி கனமாகவோமம்செய்து
நல்லசுப வேளைதன்னில்
நலமாகமங்கிலியம் தானெடுத்து
மந்திரங்கள்தானோதி மாதுகழுத்தில்தரித்தார்கள்
தாம்பூலந்தான்வழங்கி சந்தனங்கள்மிகப்பூசி
சந்தோஷமா எல்லோரும்
தம்பதிகளையுமே வாழ்த்தினார்கள்
வாழிவாழி வாழிவாழி
மாப்பிளையும்பெண்ணும் வாழியவே

கந்தர்வர் வசனம்.

கேளும் என்னுசை மருமகனே எனக்கு ஆஸ்சாதன மில்லாததால் நீயே யென்பட்டணத்தைப் பட்டங்கட்டி அரசுபுரியும் மருமகனே.

தருமகுத்தன் கவி.

மாமாவே னும்சொல்வேன்
வண்மையாய் விதர்ப்பதேசம்
நேமகமாகயேகி நிமிஷத்தில்பகைவர்தன்னை
தாமதமில்லாமலிப்போ க்ஷணந்தனில்தானும்யேகி
தீமைசெய்தவரைவாட்டி செய்குவேனரசுதானே.

வசனம்.

மாமா என்தகப்பனைக்கொன்று என்தேசமாகிய விதர்ப்பதேசத்தை கைப்பற்றிய சத்திருதியை ஜெயித்துத் தென்தேசத்தை அரசாக்ஷி செய்யாமல் விடுவதில்லை அதற்காக கொஞ்சம் படைத்துணை கொடுக்கவேணும் மாமாவே.

கந்தர்வர் வசனம்.

அப்படியே உன்மனதின் பிரகாரம் ரதகஜதுரகபதாதிகளும் நாலவகை சேனையும் என்மகளுக்குண்டாகிய சீதனவரிசைகளும் தேன் சந்தோஷமாக போய்வாருங்கள் மருமகனே.

SA
7-65